**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 103** **நாள்: 07.09.2017**

# பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவ சேவைகள் துறையின் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சி !

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தை சுகாதாரமான மாநிலமாக மாற்றவும் மற்றும் நோய்த்தடுப்பு நடவடிக்கைகளில் தனது சீரிய திட்டங்களால் தமிழகத்தை இந்தியாவின் முன்மாதிரி மாநிலமாக மாற்றவும், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை, பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரம் மற்றும் மருத்துவ சேவைகள் துறை ஆகியவற்றின் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சிக்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் மருத்துவ சேவைகள் துறையில் 15 மண்டலங்கள் மூலமாக 14 பெருநகர சமுதாய நல மருத்துவமனைகள், 3 இருபத்து நான்கு மணிநேர அவசரகால மகப்பேறு மருத்துவமனைகள், 138 மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் 3 மகப்பேறு மருத்துவமனைகள் ஆகியவை தரம் உயர்த்தப்பட்டு தேவையான உபகரணங்களுடன் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் இயங்கும் மருத்துவமனைகள் மற்றும் நகர ஆரம்ப சுகாதார மையங்களில் சிறு சிறு உடல் உபாதைகளுக்கு சிகிச்சை, நீரிழிவு நோய் மற்றும் இரத்தக்கொதிப்பு, மார்பகப் புற்றுநோய் போன்ற நோய்களை கண்டறிந்து சிகிச்சை அளித்தல், அனைத்து வகை காய்ச்சல்களுக்கும் (மலேரியா, டெங்கு, டைபாய்டு) சிகிச்சை அளித்தல், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான புறநோயாளிகள் சேவை, கர்ப்பக்கால பரிசோதனை, ஆன்லைன் மூலம் கர்ப்பம் பதிவு செய்தல், PICME எண் வாங்குதல், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தடுப்பூசி போடுதல், இரத்த அழுத்தம் மற்றும் எடை பார்த்தல், அல்ட்ராசோனோகிராம் பரிசோதனை, போலியோ மற்றும் தட்டம்மை நோய்களுக்கான கண்காணிப்பு போன்ற சிகிச்சைகள் அளிக்கப்படுகிறது.

மேலும், பள்ளி மாணவர்களுக்கான சுகாதார முகாம், போலியோ சொட்டு மருந்து முகாம், குடற்புழு நீக்க நாள் முகாம், உலக மக்கள் தொகை தின நாள், குழந்தைகளுக்கான வயிற்றுப்போக்கு முகாம், தாய்ப்பால் தின நாள், வைட்டமின்–ஏ முகாம், இந்திரா தனுஷ் தடுப்பூசி முகாம், தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசி முகாம் போன்ற சிறப்பு முகாம்களும், காசநோய்க்கான

பரிசோதனை மற்றும் சிகிச்சை, தன் சுத்தம், சுற்றுப்புற சுத்தம், சத்துணவு மற்றும் கொசு உற்பத்தியை தடுத்தல், கொசு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அவற்றை நீக்குதல் போன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் இயங்கும் மருத்துவமனைகளில் நடைபெறும் பிரசவங்களின் சிறப்பினமாக CTG Machine மூலம் சிசுவின் இருதயத் துடிப்பு தொடர்ச்சியாக கண்காணிக்கப்படுகிறது. ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்படும் பிரசவத்திற்கான பொருட்களை (Disposable delivery kit) பயன்படுத்தி பிரசவம் பார்க்கப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவமனைகளில் 2011–12 முதல் 2016–17 வரை 2,53,70,229 புறநோயாளிகள் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர். 2011–12 முதல் 2016–17 வரை பிரசவித்த தாய்மார்களின் எண்ணிக்கை 84,004. அறுவை அரங்குகளின் சிறப்பு அம்சமாக பிரசவம் மற்றும் கருத்தடை அறுவை சிகிச்சைகளுக்கு ஒருமுறை மட்டுமே உபயோகப்படுத்தக்கூடிய Disposable LSCS Delivery Kit, Video Laparoscopy மற்றும் Sonomamogram ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன. 2011–12 முதல் 2016–17 வரை கருத்தடை அறுவை சிகிச்சை மூலம் பயன்பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை 59,707 மற்றும் 34,765 தாய்மார்களுக்கு சிசேரியன் அறுவை சிசிச்சை மூலம் பிரசவம் நடைபெற்றுள்ளது.

தேசிய தடுப்பூசி அட்டவணைப்படி அனைத்து தடுப்பூசிகளும் இலவசமாக அனைத்து நலவாழ்வு மையங்களிலும் மற்றும் களப்பணியின் போதும் போடப்படுகின்றன. முன்பு குழந்தைகளுக்கு DPT தடுப்பூசி போடப்பட்டு வந்தன. தற்போது அனைத்து பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவமனைகளில் குழந்தைகளுக்கு பென்டாவேலன்ட் தடுப்பூசிகள் போடப்படுகிறது. ஏப்ரல் 2016 முதல் ஊசிவழி போலியோ மருந்து குழந்தைகளுக்கு போடப்பட்டு வருகிறது. 06.02.2017 முதல் தட்டம்மை தடுப்பூசிக்கு பதிலாக தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. அனைத்து தடுப்பூசிகளும் வழக்கமான தேசிய தடுப்பூசி அட்டவணையின்படி போடப்பட்டு வருகிறது.

2011–12 முதல் 2016–17 வரை பி.சி.ஜி. – 55,266 பயனாளிகள், பென்டாவேலன்ட் வேக்சீன் – 3,15,337, ஓரல் போலியோ டிராப்ஸ் – 3,15,337, மீசில்ஸ் – 3,45,775 குழந்தைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. தற்போது ஊசி மூலமாக கொடுக்கப்படும் போலியோ தடுப்பூசி மருந்து – 49,615 குழந்தைகள் பெற்று பயனடைந்துள்ளனர். மேலும் 2016–17 ஆம் ஆண்டில் 9 மாதம்

முடிவடைந்த குழந்தைகள் முதல் 15 வயதிற்குட்பட்ட 16,01,438 குழந்தைகளுக்கு தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

பெண்களுக்கு எளிய முறையில் கர்ப்பப்பைவாய் புற்றுநோய் ஆரம்ப நிலையில் கண்டறியும் பரிசோதனை அனைத்து பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவமனைகளில் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் 2011–12 முதல் 2016–17ல் 3,16,314 பெண்கள் பயனடைந்துள்ளனர்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தாய், சேய் நலனில் அக்கறை கொண்டு அவர்களின் பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியமான குழந்தை பெறுவதற்கு கருணை திட்டமான தமிழக அரசின் டாக்டர்.முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம் சென்னை மாவட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் செயல்படுத்தப்படுகிறது.

டாக்டர்.முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டத்தின் மூலம் அரசு மருத்துவமனைகளில் பரிசோதனை மற்றும் பிரசவம் மேற்கொள்ளும் அனைத்து கர்ப்பிணிப் பெண்களுக்கும் 2011–12 முதல் 2016–17 வரை ரூ.211,43,40,000/– வழங்கப்பட்டுள்ளது.

தேசிய ஊரக சுகாதாரத் திட்டம் ஏழை எளிய கர்ப்பிணி பெண்கள் தங்களது கருவுற்றிருக்கும் காலத்தில் தாய், சேய் பாதுகாப்பிற்காகவும், கருவில் ஏற்படும் குழந்தை மரணத்தை தடுப்பதற்காகவும் ஏற்படுத்தப்பட்ட அரசின் ஒரு இன்றியமையாத திட்டமாகும்.

தேசிய நகர்ப்புற சுகாதார பணியின் கீழ் பொதுசுகாதாரத்துறை மற்றும் மருத்துவ சேவைகள் துறை ஆகியவை ஒரு கூரையின் கீழ் இணைக்கப்பட்டு விரிவான சுகாதாரம் மற்றும் மருத்துவ சேவைகள் அளிக்கப்பட்டு வருகிறது.

பிரசவித்த தாய்மார்களுக்கு ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டத்தின்கீழ் ரூ.600/– வழங்கப்படுகிறது. 2011–12 முதல் 2016–17ல் மொத்தம் 76,884 பயனாளிகளுக்கு ரூ.4,61,30,400/- இத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டது.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**